**Judicial Form No.53**
**(See Rule 42)**
DEPOSITION OF WITNESS
**(Chapter XXIII Code of Criminal Procedure)**
----
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT, SATHANKULAM**
**DATE: 03.06.2024**

**Case No : CC 94 / 2016**

**Deposition of Witness : P.W. 4**

| | |
|---|---|
| **Name:** தேவதாஸ் | **Caste:** |
| **Father / Husband Name:** பால்துரை | **Calling:** |
| **Village:** திருவரங்கநேரி | **Religion:** |
| **Taluk:** சாத்தான்குளம் | **Age: 62** |

**Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act 1969 (Central Act 44 of 1969) on 03.06.2024**

<u>முதல் விசாரணை:</u>

நான் திருவரங்கநேரியில் குடியிருந்து சமையல் மாஸ்டராக பணியாற்றி வருகிறேன். அ.சா.1 என் மனைவி ஆவார். அ.சா.2 என் மகள் ஆவார். எதிரிகளை தெரியும். கடந்த 18.6.2012 ம் தேதி மதியம் 2.30 மணியளவில் நானும் அ.சா.1 மற்றும் அ.சா.2 ம் திருவரங்கநேரியில் உள்ள எங்கள் வீட்டிற்கு சென்று கொண்டிருந்தபோது எங்கள் வீட்டின் முன்பு வைத்து இவ்வழக்கின் எதிரி செல்வராஜ் என்பவர் மட்டையால் என்னை முதுகில் அடித்தார் மற்றும் வலதுகை இடது கை ஆகிய இடங்களில் அடித்தார். எதிரி கிருபாகரன் கம்பால் என் மகளை கையிலும் முதுகிலும் அடித்தார். மற்றும் என் மனைவியை கிருபாகரன் செங்கல்லை கொண்டு எறிந்தார். அதனால் என் மனைவிக்கு 3 பற்கள் விழுந்துவிட்டது. சம்பவத்தை பார்த்த அருகிலிருந்தவர்கள் விலக்கிவிட்டார்கள். காயம்பட்ட நாங்கள் டிரக்கர் பிடித்து சாத்தான்குளம் அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்கு சென்றோம். நானும் என் மகளும் வெளிநோயாளியாக சிகிச்சை பெற்றோம். என் மனைவியை திருநெல்வேலி அரசு மருத்துவமனைக்கு மேல் சிகிச்சைக்கு அனுப்பி வைத்தார்கள். இதுசம்பந்தமாக போலீசார் என்னை விசாரித்தார்கள்.

<u>குறுக்கு விசாரணை</u>

எனது தாயார் பெயர் சொர்ணம்மாள். என் தந்தை பால்துரை நான்

சிறுவயதாக இருந்தபோதே இறந்துவிட்டார் என்றால் சரியல்ல. 2005 ல்தான் இறந்தார். 1ம் எதிரியின் தந்தை பெயர் முத்து நாடார் மற்றும் சொர்ணம்மாளுக்கு பிறந்தவர் 1ம் எதிரி என்றால் சரிதான். என் தகப்பனார் பால்துரை இறந்த பின்புதான் என் தாயார் முத்து நாடாரை திருமணம் செய்தார் என்றால் இல்லை, திருமணம் செய்யவில்லை. அவர்களுக்குள் உறவு ஏற்பட்டு 1ம் எதிரி பிறந்தார். நான் என் தந்தையின் தாயார் பராமரிப்பில் இருந்து வந்தேன் என்றால் இல்லை. என் தாயார் குடியிருந்த வீடு முத்து நாடார் வாங்கி கட்டிக்கொடுத்த வீடு என்றால் இல்லை. அந்த வீட்டில்தான் முத்து நாடார், என் தாயார் மற்றும் 1ம் எதிரி குடியிருந்து வந்தார்கள் என்றால் இல்லை. சொர்ணம்மாளுக்கு பாத்தியப்பட்ட வீடு அருகே எனக்கு தனியாக வீடு உள்ளது என்றால் சரிதான். அ.சா.1 க்கு ஏற்பட்ட காயங்கள் குறித்து நான் நேரடியாக பார்க்கவில்லை என்றால் சரிதான். அ.சா.1 க்கு காயங்கள் ஏற்பட்ட சமயம் நானும் என் மகளும் மெஞ்ஞானபுரத்தில் இருந்தோம் என்றால் சரிதான். மருத்துவமனை செல்வதற்கு முன்பே சம்பவ இடத்திற்கு காவல்துறையினர் வந்தார்கள் என்றால் சரிதான். எனக்கும் 1ம் எதிரிக்கும் வீடு சம்பந்தமாக பிரச்சனை இருந்தது என்றால் சரிதான். 1ம் எதிரியை நாங்கள் தாக்கியதாக எங்கள் மீது வழக்கு தாக்கல் செய்து அதில் விடுதலை செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். எனக்கும் என் மகளுக்கும் இருசக்கர வாகனத்தில் வரும்போது கீழே விழுந்து ஏற்பட்ட காயத்தை கொண்டு சிவில் வழக்கில் எதிரியை பணிய வைக்க வேண்டும் என்று எதிரிமீது பொய்யாக புகார் கொடுத்து சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல. அ.சா.1 க்கு வேறு எங்கோ ஏற்பட்ட காயத்தை கொண்டு எதிரிமீது பொய்யாக புகார் கொடுத்து சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல. வழக்கிற்கும் எதிரிகளுக்கும் தொடர்பில்லை என்றால் சரியல்ல. நான் சொன்ன நேரத்தில் சம்பவ இடத்திற்கு நான் வரவில்லை என்றால் சரியல்ல. சம்பவ காலத்தில் நானும் என் மனைவியும் மெஞ்ஞானபுரத்தில்தான் குடியிருந்து வந்தோம் என்றால் சரிதான். அவ்வப்போது ஊருக்கும் சென்று வருவோம். அ.சா.1 ன் என் மனைவி என்பதால் அவருக்கு ஆதரவாக பொய்யாக சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல.

Taken down by me in the open court to the presence of the Accused Read over to the witness and admitted by him to be correct.

(S/d)Tmt.C.Kalaiyarasi Reena
Judicial Magistrate,
Sathankulam.